# பொருள் 1: படைப்பில் கடவுளின் அன்பு

பாடம் 1

## 1. எழில் மிகு புவி

**வாசிப்போம்**
**தொடக்கநூல் 1: 1-2**
தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும்,
மண்ணுலகையும் படைத்தபொழுது, மண்ணுலகு
உருவமற்று வெறுமையாக இருந்தது;
ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது.
நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி
அசைந்தாடிக்கொண்டிருந்தது.

அம்மா : ரவி, கமலா! நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?


பிள்ளைகள் : அம்மா ! நாங்கள் எங்களது அறையில் இருக்கிறோம்.

அம்மா : என்ன, அறை ஒரே இருட்டாக இருக்கிறதே. யன்னலைத் திறந்து விடுங்கள். சூரியஒளி வரட்டும். *(பிள்ளைகள் யன்னலைத் திறந்து விடுகிறார்கள், அறை ஒழுங்கற்று, அலங்கோலமாகக் காணப்படுகிறது)*

அம்மா : இதென்ன! அறை முழுவதும் பொருட்கள் சிதறி ஒழுங்கற்று இருக்கிறதே. நடப்பதற்கோ, பொருட்களை வைக்கவோ எடுக்கவோ முடியாது இருக்கிறது. வாருங்கள் பொருட்களை ஒழுங்காக அடுக்குவோம். *(பிள்ளைகள் அம்மாவுடன் சேர்ந்து, அறையை ஒழுங்குபடுத்துகிறார்கள்)*

கமலா : இப்போது, இந்த அறை எவ்வளவு சுத்தமாகவும் ஒழுங்காகவும் இருக்கிறது.


அம்மா! நீங்கள் எங்கள் மேலுள்ள அன்பால் அறையை ஒழுங்குபடுத்தினீர்கள். நன்றி அம்மா!



ரவி : அது மாத்திரமல்ல அம்மா! நாங்கள் வசதியாக இவ்வறையைப் பாவிக்கவும், மகிழ்ச்சியாக இருக்கவும், அலங்கோலமாக இருந்த இவ்வறையை, பொருட்களை அதனதன் இடத்தில் வைத்து, ஒழுங்குபடுத்தினீர்களே. உங்கள் அன்புக்கு நன்றி அம்மா!

கமலா : அம்மா! இவ்வாறு தானே தொடக்கத்தில் கடவுள், உருவற்று இருளாய் வெறுமையாயிருந்த இம்மண்ணுலகை, உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாய் உருவாக்கினார்.


அம்மா : ஆம் பிள்ளைகளே, கடவுள் நம்மை நேசித்து, குழப்பமான சிக்கல் நிறைந்த இப்புவியை நாமும், மற்றைய உயிரினங்களும் வாழக்கூடிய சூழலாய் உருவாக்கினார். அத்தோடு, நாம் எவ்வாறு அறையை ஒழுங்குபடுத்தினோமோ, அதேபோல் உயிரினங்களை ஒழுங்குபடுத்தி அவை இணைந்து வாழவும் செய்தார்.
சரி இவை எல்லாவற்றையும், நாம் படைப்புக்களிடமே கேட்டறிவோம்.



**வாசிப்போம்**

**யோபு 38 : 24 - 38**

"ஒளி தோன்றும் இடத்திற்கு பாதை ஏது? கீழைக்காற்று அவனிமேல் வீசுவது எப்படி? வெள்ளத்திற்கு, கால்வாய் வெட்டியவர் யார்? . . . இடி மின்னலுக்கு வழிவகுத்தவர் யார்? மனிதர் வாழா மண்ணிலும், மாந்தர் குடியிராப் பாலையிலும் மழை பெய்வித்துப் பாழ்வெளிக்கும் வறண்ட நிலத்திற்கும் நீர் பாய்ச்சிப் பசும்புல் முளைக்கச் செய்தவர் யார்?'



பகலை ஆளவும், புவிக்கு ஒளி மற்றும் வெப்பம் கொடுக்க கடவுள், என்னைப் படைத்தார். நான் வெளியிடும் வெப்பத்தால் காற்று வீசுகிறது, மழை பொழிகிறது, வறண்ட நிலங்கள் ஈரலிப்பாகின்றன. அத்துடன் நான், தாவரங்கள் உணவு தயாரிக்க வேண்டிய ஆற்றலையும் வழங்குகிறேன்.

நாங்கள் வளர ஒளியையும், உரிய காலத்தில் பெய்யும் மழையையும் கடவுள் எங்களுக்குத் தருகிறார். நாங்கள் அனைத்து உயிரினங்களுக்கும் உணவைத் தருகிறோம். கொளுத்தும் வெயிலில் நிழலைத் தந்து நற்சுகமளிக்கிறோம்.



**வாசிப்போம்**

திருப்பாடல் 65 : 9

" மண்ணுலகைப் பேணி அதன் நீர் வளத்தையும் நில வளத்தையும் பெருக்கினீர்! கடவுளின் ஆறு கரைபுரண்டோடியது: அது தானியங்களை நிரம்ப விளையச் செய்தது. நீரே (கடவுளே) அவற்றை இவ்வாறு விளையச் செய்துள்ளீர்"



நாம் கால் நடைகளுக்கு புல்லை விளைவிக்கிறோம். மனிதருக்கு பயிர் வகையை வளரச் செய்து உணவை அளிக்கிறோம். இவ்வாறு உயிர் வாழ்வன அனைத்தையும் இணைந்து வாழச் செய்கிறோம்.

**வாசிப்போம்** :- திருப்பாடல் 65 : 6 , 105 : 45

'வல்லமையை இடைக்கச்சையாகக் கொண்ட நீர் உமது ஆற்றலால் மலைகளை உறுதிப்படுத்துகின்றீர்.'

'அவர் கற்பாறையைப் பிளந்தார். தண்ணீர் பொங்கி வழிந்தது; அது பாலை நிலங்களில் ஆறாய் ஓடிற்று.'

பனிப் போர்வையால் மூடப்பட்டு, உயர்ந்த கிரீடமாக விளங்கும் என்னை, கடவுள் புவியின் மகிமையை உயர்த்தப் படைத்தார்.என்னில் தோன்றும் நீர் ஊற்றுகள் நீர் வீழ்ச்சியாய் உருவெடுத்து, ஆறாய் ஓடிப், புவியை நனைக்கிறது. புவியில் தாவரங்கள் நன்கு வளர உதவுகிறது.





அன்பான பிள்ளைகளே, " கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன." தொடக்கநூல் 1:31. உயிர் வாழ்வனவற்றின் உரிய சூழலைத் தரும் என்னை, தொடர்ந்து பேண, தன் சாயலில் படைத்த மாந்தரை நியமித்தார். ஆனால் அவர்கள், சுய நலமிக்கோராய்த் தம் சொந்த தேவைகளைப் பூர்த்தி செய்ய, பொறுப்பின்றி சூழலை உபயோகித்து அழிக்கின்றனர்.

மனிதா நீ செய்வது யாது! மரங்களை அழித்து, மழைவீழ்ச்சியைக் குறைக்கின்றாய். நீர் நிலங்களை மாசுறச் செய்து, நீர் வாழ் அங்கியை அழிக்கிறாய். காடுகள், மலைகளை தரைமட்டமாக்கி மண் அரிப்பை ஏற்படுத்துகிறாய். நச்சுப்புகையை வளியில் விட்டு ஓசோன் படையில் துளையை ஏற்படுத்துகின்றாய். இறை படைப்பாகிய எங்களை ஏன் மாசுபடுத்தி அழிக்கிறாய். இன்றே சிந்தித்து உன்னையும், என்னையும அழிவினின்று காப்பாய்!

கமலா : ரவி, புவி தன் கதையால் சிறப்பான பாடத்தை எங்களுக்குக் கற்றுத் தந்துள்ளது.

ரவி : ஆம் கமலா, குழப்பமான சூழலை உயிரின வாழ்விற்குப் பொருத்தமாக மாற்றிய கடவுளுடன் இணைந்து, புவியைப் பேணிப் பாதுகாத்தல் நமது கடமையாகும்.

அம்மா : ஆம் பிள்ளைகளே, நீங்கள் கூறுவது மிகவும் சரி. கடவுள் எவ்வாறு புவியை ஒழுங்காகவும் பயனுள்ளதாகவும் படைத்தாரோ, அதே போல கடவுளில் விசுவாசம் வைக்கும் போது, கடவுள் நமது வாழ்க்கையையும் ஒழுங்குமிகு வாழ்வாக மாற்றுவார். கடவுள் தந்த வாழ்க்கையை நாம் பயபக்தியுடன் பாதுகாப்போம்.

### சிந்திப்போம்




- குழப்பமான சிக்கல் நிறைந்த சூழலை கடவுள் உயிரினங்கள் வாழக்கூடிய சூழலாய் மாற்றி, தமது அன்பை வெளிப்படுத்தினார்.
- உயிரினங்களை ஒழுங்குபடுத்தி சூழலுடன் இணைந்து வாழச் செய்தார்.
- கடவுளுடன் சேர்ந்து நாம் உயிர் வாழ் சூழலைப் பாதுபாப்போம்.
- நாமும் நமது வாழ்வை, இறை படைப்பைப் பார்த்து ஒழுங்குடையதாக்கிக் கொள்வோம்.

## செயற்படுவோம்

- நமது சுற்றாடலைப் பராமரித்து, பாதுகாக்க முன்வருவோம்.
- பாடசாலை சுற்றாடல் கழக அங்கத்தவராய் சூழல் பாதுகாப்பில் ஈடுபடுவோம்.
- பாடசாலை/ வீட்டுத் தோட்டத்தை அழகுபடுத்தி கடவுளின் படைப்பை பாதுகாக்கத் திட்டங்களை மேற்கொள்ளுவோம்.

## செயற்பாடு

1. உங்களது பாடசாலையின் சுற்றாடலை மாசுபடுத்தும் செயல்பாடுகளைக் கண்டறியுங்கள்.
2. உங்கள் பாடசாலையின் சுற்றாடலைப் பேணுவதற்கு அனைத்து மாணவர்களும் சேர்ந்து செய்யக்கூடிய வழிமுறைகளை விளக்கி அறிக்கை தயாரியுங்கள்.
3. புவியையும் அதனிலுள்ள அனைத்து உயிர்வாழ் அங்கிகளையும் படைத்தமைக்காக நன்றிகூறும் மன்றாடல் எழுதுக.



## குறுக்கெழுத்து புதிரைப் பூர்த்தி செய்க.

1. தொடக்கநூல் 1: 1-2

**இடமிருந்து வலம்**


1. தொடக்கத்தில், மண்ணுலகு இவ்வாறு இருந்தது.

**மேலிருந்து கீழ்**

2. ஆழத்தின் மீது இது பரவியிருந்தது.
3. கடவுள் மண்ணுலகைப் படைக்கும் போது, இப்படி இருந்தது.




2. திருப்பாடல் 65 : 6, 105 : 41





**இடமிருந்து வலம்**

1. வல்லமையை இடைக்கச்சையாகக் கொண்டவர்.
2. தண்ணீர் ஆறாய் ஓடிய இடம்.

**மேலிருந்து கீழ்**

1. இது தண்ணீரைப் பெறுவதற்காகப் பிளக்கப்பட்டது




**இடமிருந்து வலம்**

1. சூழலை நாம் இவ்வாறு பாவிக்க கடவுள் எதிர்பார்க்கிறார்.
2. நாம் நமது செயல்பாட்டால் சூழலை இவ்வாறு செய்யக்கூடாது.

**மேலிருந்து கீழ்**

2. புவியை உயிர்வாழக்கூடிய சூழலாய் படைத்த கடவுளின் இக்குணாதிசயமேயாகும்.

3. "கிரீன் பீஸ்` (Green peace) எனும் இயற்கையை பாதுகாக்கும் தன்னார்வத் தொண்டர் குழுவைப் பற்றிய தகவல்களைத் தேடிப் பெறுக.